# நூலகங்கள்

(இனம் - 20)

1. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொது நூலகத்துறையின் வாயிலாக இம்மாநிலத்தில் நூலகப் பணிக்கு வழிவகை செய்யப் பெற்றுள்ளது. மாநிலத்தில் பொது நூலகங்களை நிறுவுவதற்கும், ஊரகங்களிலும், புறநகர்ப்பகுதிகளிலும் நூலகங்களை அமைப்பதற்கும் வழிவகை" செய்வதற்காக இயற்றப்பட்ட இச்சட்டம்தெரிவிக்கின்றது. சென்னை நகரத்திற்கு என ஒன்றையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று வீதமும் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. முதன்மை மற்றும்கிளை நூலகங்களை அதன் அதிகார வரம்பெல்லைக்குள் அமைப்பது உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் பொறுப்பாகும். 19 மாவட்ட மைய நூலகங்களும், 1545 கிளை நூலகங்களும் 9 நடமாடும் நூலகங்களும். 1069 பகுதி நேர நூலகங்களும் இம் மாநிலத்தில் உள்ளன. மாநில மைய நூலகமாக கன்னிமாரா பொது நூலகம் அறிவிக்கப் பெற்றுள்ள நூலகங்களிலும், உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களிலுமாக 3440 பேர் பணியாற்றுகின்றனர். நூலகங்களுக்கு 1996–97 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 14.64 கோடி ரூபாய்களாகும் ; இதில் திட்ட முதலீடான 28.90 இலட்சம் ரூபாய்களும் அடங்கும்.

02. சொத்துவரி அல்லது வீட்டு வரி இவற்றின் மீதான 3 விழுக்காடு வீதம் மேல்வரி வடிவத்தில் நூலக வரி விதிப்பதற்கு மேற்குறிப்பிட்ட சட்டம் வழிவகை செய்கிறது (இவ்வீதம் 5 விழுக்காடாக திருத்தப்பட்டு, இப்போது 10 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது). இவ்வரியினை உள்ளாட்சி அமைப்புகள் திரட்டி திரட்டப்பெற்ற தொகையை மாவட்ட உள்ளூர் நூலக ஆணைக்குழுவிற்குத் திருப்பிச் செலுத்தி விடுகின்றன. "மாவட்டத்தில் திரட்டப்பட்ட வரிகளுக்குக் குறையாத அளவிலான" தொகைக்கு நிகரான மானியத்தை மாநில அரசும் வழங்குகின்றது. உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவானது நூலக நிதியம் ஒன்றைப் பராமரித்து வருகின்றது. இதில் வரியும் அரசு மானியமும் ஒன்றாக்கப்பட்டு இச்சட்டத்தின் படி அமைக்கப்பட்ட நூலகங்களுக்காகும் செலவினங்கள் மேற்கொள்ளப் பெறுகின்றன. 1994–95 ஆம் ஆண்டிலும் 1995–96 ஆம் ஆண்டிலும் திரட்டப்பட்ட வரி முறையே 6.12, 7.82 கோடி ரூபாய்களாகும். 1996 ஆம் ஆண்டு செப்படம்பர்த் திங்களன்று வரை திரட்டப் பெற வேண்டிய கணக்கிடப் பெற்ற நிலுவை வரி 23.57 கோடி ரூபாய்களாகும் என அறியப் பெறுகின்றது. தவிரவும் நூலகங்களையும், படிப்பகங்களையும் கட்டுவதற்கு முறையே 1994–95 ஆம் ஆண்டிலும் 1995–96 ஆம் ஆண்டிலும் பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணிகளின் வாயிலாக 110.28 இலட்சம் ரூபாய்கள், மற்றும் ரூ. 97.98 இலட்சம் அளிக்கப் பெற்றிருக்கின்றன.

03. இச்சட்டத்தின் படி அமைக்கப் பெற்ற உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவானது பரவலான அடிப்படையை உடையது ஒன்றாகும். இதில் ஊரக மற்றும் நகர் உள்ளாட்சி அமைப்புகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களும் பங்கேற்க வழிவகை செய்யப் பெற்றுள்ளது. மேற்குறிப்பிடப் பெற்ற இச்சட்டத்தின், பிரிவு 5(3) – இன் படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவில் (1) பொது நூலகங்களின் இயக்குநரால் நியமிக்கப் பெறும் 10உறுப்பினர்கள் (5 பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் மற்றும் 3 நூலகத்தைச் சார்ந்த அலுவலர்கள்) (2)ம ாவட்டக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர். (3) மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளின் தலைவர்களால் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உறுப்பினர் வீதம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள். (4) ஒவ்வொரு நகராட்சிக் குழுவிற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டு மாவட்டத்திலுள்ள நகராட்சிக் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள். (5) உள்ளாட்சி நூலக ஆணைக் குழு ஒவ்வொன்றும் தனது உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தலைவராகத் தெரிவு செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது.

04. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குக் குறிப்பிட்ட அதிகாரங்களை அளிப்பது தொடர்பில் எழுபத்து மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 29 பொருண்மைகளைக் (11ஆவது அட்டவணை) குறிப்பிட்டுள்ளது. இவ்வினங்களுள் (இனம் எண்.20) நூலகமும் ஒன்றாகும். 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் பிரிவு 111 (எ) வின் படி, "படிப்பகங்களைத் திறப்பது மற்றும் அவற்றைப் பராமரிப்பது" ஆகிய பணிகள் ஊராட்சிகளால் மேற்கொள்ளப் பெற வேண்டுமென ஒப்படைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் மூன்று படிநிலை அமைப்பிடம் பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப் பெற வேண்டுமெனப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளது. மாநிலத் திட்ட குழு தற்போதைய ஏற்பாடுகள் குறித்துக் கவனத்தில் கொண்டுள்ளது; மேலும் அவ்வேற்பாடுகளுக்குக் குறுக்கீடு இல்லாமல் தொடர்ந்து இந்நிலை நீடிக்க வேண்டுமெனக் கருத்துக் கொண்டுள்ளது. முதல் நிலையில் உள்ளாட்சி நூலக அதிகாரக் குழுக்களால் நூலகங்கள் ஏற்படுத்தப்படாத, நூலகப் பணி அமையாத ஊர்களில் நூலகங்களைத் திறப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்படலாம். மேலும் ஊராட்சிகளால் தற்போது இயக்கப்பட்டு வரும் நூலகத் அமைப்புகளை இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஊர்களிலிருந்து மாவட்ட அளவில் மேற் கொள்வதற்கான அதிகாரங்களை மாவட்ட திட்டக்குழுவுடன் கலந்தாய்ந்து முடிவு செய்யப் பெறும்.

## I. ஊராட்சி

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | நூலகங்களைத் திறத்தல் | 1. ஊராட்சியில் புதிய நூலகங்களைத் திறத்தல். |
| 2. | பொது நூலகங்களை இயக்குதலும் பராமரித்தலும் | i). வளர்ச்சித் திட்டங்கள் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன் படுத்தி படிப்பகங்களையும் நூலகக் கட்டங்களையும் கட்டுதல்.<br>ii) ஊராட்சியில் இயங்கி வரும் உள்ளூர் நூலக ஆணைக்குழு நூலகங்களை எடுத்துக் கொள்ளுதல்<br>iii) அரசு மானியத்திற்கு ஈடாக நூலக வரியுடன் சேர்த்து நூலகத்தைப் பரா மரித்து இயக்குதல். |
| 3. | நூலக வரியைத் தண்டல் செய்து திருப்பிச் செலுத்துதல் | i) அரசால் குறிப்பிடப்பட்டவாறான நூலக வரியைத் திரட்டுதல், அதனை மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிற்குத் திருப்பிச் செலுத்துதல்.<br>ii) நூலகத்தை இயக்குவதற்காகவும் பராமரிப்பதற்காகவும் நூலகவரியையும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிலிருந்து அதற்கு ஈடான மானியத்தையும் பெறுதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | நூலகங்களைத் திறத்தல் | i) நூலகங்கள் இல்லாத ஊர்களில் நூலகங்களை நிறுவுவதற்கான விரி வான திட்டங்களைத் தயாரிப்பதில் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவிற்கு உதவுதல்<br>ii) உரிய வளர்ச்சித் திட்டங்களின் கீழ் நூலகக் கட்டடத்தையும் படிப்பகங் களையும் கட்டுவதற்காகச் ஊராட்சிகளுக்கு நிதியுதவியையும் தொழில் நுட்ப உதவிகளையும் அளித்தல். |
| 2 | மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் பங்கேற்றல் | i) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் உறுப்பினராக (உறுப்பினர்களாக) ஆவதற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதியலமைந்த ஒன்று அல்லது அதற்குமேல் பல சிற்றூராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | மாவட்டத்திலுள்ள நூலகங்களின் மேம்பாடு | i) மாவட்டத்தில் புதிய நூலகங்களை திறப்பதற்கும், நூலக பணிக்களுக்கான திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவிற்கு அறிவுரை வழங்குதல்<br>ii) மக்களிடையே படிக்கும் வழக்கத்தை வளர்ப்பதற்கும் நூலகத்தைப் பயன் படுத்துவது குறித்து பரப்புவதற்கும் இயக்கத்தை ஏற்படுத்துதல்<br>iii) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவில் உறுப்பினராவதற்கு மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஒருவரை தேர்ந்தெடுத்தல்.<br>iv) முதியோர் கல்வி, அனைவருக்கும் எழுத்தறிவு மற்றும் முறைசாராச் கல்வி திட்டம் ஆகியவற்றை பொது நூலகப் பணிகளுடன் ஒருங்கிணைப்பது பற்றி அறிவுறுத்துதல். |
| 2. | நூலகத் திட்டங்களைச் சீராய்வு செய்தல் | i) நூலக நடவடிக்கைகளுக்காக அரசு மானியம் பெற ஊராட்சிகளுக்கு வசதி செய்து தருதல்<br>ii) பின்வரும் அரசின் திட்டங்களை ஆய்வு செய்தல்<br>அ) புதிய நூலகங்கள் திறப்பு |

| தொடர் எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| | | ஆ) நூலகங்கள் படிப்பகங்கள் கட்டுதல் மற்றும்<br>iii) நூலகங்களுக்கான அரசு மானியங் களைப் பெறுதல் ஆகிய அரசு திட்டங்களை மறுபார்வையிடும் பணியை மேற் கொள்ளுதல் |

நிர்வாகச் சிக்கல்கள்

05. **1982** ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் **31** ஆம் நாள் வரையில் உள்ளூர் நூலக ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள நூலகங்கள் அவற்றிற்கென தாமே பணியாளர்களை நியமித்திருந்தன; அப்பணியாளர்களுக்கான சம்பளமும் படிகளும் பிற ஆதாயங்களும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக் குழுவின் நிதியிலிருந்து வழங்கப்பெற்றன. **3.5.1982** ஆம் நாளும் **820** நிலை எண்ணும் பெற்ற கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல்துறை ஆணையின்படி உள்ளூர் நூலக ஆணைக்குழுவின் பணியாளர்களின் பணிகள் கல்வித்துறையுடன் இணைக்கப்பட்டதாக அரசு ஆணையிடப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் கல்வித் துறையிலுள்ள ஆசிரியர்களையும், மருத்துவம் குடும்ப நலத்துறையின் குறிப்பிட்ட நலப் பணியாளர்களையும் அரசுப் பணியாளர்ளாக அரசு இதே ஆண்டில் **(1982)** அறிவித்தமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். **1994** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் **108, 109** ஆகிய பிரிவுகளுக்கிணங்க ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர் உட்பட ஆசிரியர்களும், அடிப்படை பணியாளர்களும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் பொது சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் நலப்பணி உதவியாளர்கள், துணை செவிலியர், பேறுகால உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோரும் முழுநேர அரசுப் பணியாளர்களாகக் கருதப்படுவர், அவர்களின் பணிவரையறைகளை முறைப்படுத்தும் விதிகளும் அரசுப் பணியாளர்களுக்கு உள்ள விதிகளேயாகும். தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் இதைப் போன்றதொரு பாதுகாப்பினை உள்ளூர் நூலக ஆணைக்குழு பணியாளர்களுக்கு அளிக்கவில்லை. இந்த பிண்ணனியில், ஊராட்சியிலுள்ள உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் கீழமைந்து இயங்கும் நூலகங்கள் ஊராட்சிகளால் சிறந்த முறையில் கவனிக்கப்பட்டு நிருவகிக்கப்பட வேண்டும் என மாநிலத் திட்ட குழு கருதுகிறது. எனவே **1982** ஆம் ஆண்டில் கல்வித் துறையுடன் இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களை ஊராட்சிகளுக்கு அயல் பணியில் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்பதுடன் **3.5.1982** ஆம் நாளிட்ட **802** நிலை எண் பெற்ற கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறை அரசாணையில் கருதப்பட்டவாறு அவர்களுடைய சம்பளங்களும் பணிவரைமுறைகளும் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டுவதாகும். இத்தகைய பணியாளர்கள் ஓய்வு பெறும் போது ஊராட்சிகள் நூலகப் பணிகளைக் கவனிப்பதற்கென தாமே சொந்தமாகப் பணியாளர்களை நியமித்து கொள்வதற்குத் தேர்வுரிமையைப் பெற வேண்டும். இது தொடர்பில் தேவைப்படும் அரசு முறை வழிகாட்டல்களை வெளியிட இயலும். மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களின் பணியாளர்களைப் பொறுத்த வரையில், பொது நூலக இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து பணியாற்றி வர வேண்டும். இவ்வுண்மைகளின் அடிப்படையில் நூலகங்களில் பணியாற்றி வரும் இணைக்கப்பட்ட பணியாளர்களின் பணி வரையறைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுடைய பதவி உயர்வு / மாறுதல்கள் ஆகியவையும் அரசு வழிகாட்டல்களின் பேரில் வரையறுக்கப்பட வேண்டும்.

06. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டமும் விதிகளும் தெரிவு செய்யப் பெறுவதற்கும் நியமிக்கப் பெறுவதற்கும் உரிய பலதரப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவை அமைப்பதனைக் குறிப்பிடுகின்றன. நியமண உறுப்பினர்களின் எண்ணிக்கையானது தேர்ந் தெடுக்கபட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான தாகும். மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 5ஆம் பிரிவிற்கு அ) ஊரக மற்றும் புறநகர் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களுக்கும் போதுமான அளவில் உறுப்பினர் நிலைஅளிப்பது. ஆ) மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவின் திறமையான மோலாண்மையின் பொருட்டு மாவட்ட ஊராட்சிகளின் உறுப்பினர்களுக்கும் மாவட்டத் தலைமையிட நகராட்சிகள் / மாநகராட்சி மன்றங்களின உறுப்பினர்களுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் அளிப்பது ஆகிய மாறுதல்களைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும். ஊரக புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களில் அதிக அளவில் பிரதிநிதித்துவம் அளிப்பதன் வாயிலாக பஞ்சாயததுராஜ் நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் பயன்படும் வகையில் கொண்டு வர இயலும். இந்த வகையில் நூலகங்களிடம் செய்கடமைகளை உரியவாறு ஒப்படைத்தால் சிறந்த முறையில் நிறைவேற்றப்படும் என மாநிலத் திட்ட குழு கருதுகிறது.

07. இம்மாநிலத்தில் மக்களனைவரும் எழுத்தறிவு பெறும் இயக்கத்தை மாநில அரசு தொடங்கியுள்ளது. முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றின் துணையுடன் முறைசாராக் கல்வியானது தொடக்கக் கல்வி பயிலுவதிலிருந்து எவரும் விடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் நலத்திட்டங்களின் கீழ் பெரும் எண்ணிக்கையில் மாணவர்களைக் கொண்டு செயற்படுத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது. இத்தகைய முயற்சிகள் ஊர்களிலுள்ள பொது நூலகங்களின் தகுந்த ஆதரவுடன் செயற்படுவது அவசியமாகும். இந்தச் சூழலில் தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டம் முழுவதுமாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது; அல்லது புதுச்சட்டம் இயற்றப்பட வேண்டியுள்ளது.

## நிதிச் சிக்கல்கள்

08. நூலக நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக, உள்ளாட்சி அமைப்புகளால் நூலக வரி விதிப்பிற்கும், மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுவில் வரிகளைச் பொதுச் சேர்மத்தில் சேமிப்பதற்கும் மேற்குறிப்பிட்ட சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் படி நூலக வரிக்குக் குறையாத அளவு தொகையை மானியமாக அரசு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளால் மாவட்ட அளவில் பொதுச்சேர்மத்தில் வைக்கப்பட்ட வரியானது பொது நூலகங்களைத் தொடங்குவதற்கும் பராமரிப்பதற்கும், ஊராட்சிகளுக்கிடையில் விகிதப்படி பங்கீட்டுக் கொடுப்பது பொருத்தமானதும் பயனுள்ளதும் ஆகும். மேலும், மாவட்ட ஊராட்சி மூலமாக ஊராட்சிகளிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் நூலக வளர்ச்சிக்காக அரசு மானியங்கள் மாவட்ட உள்ளாட்சி நூலக ஆணைக்குழுக்களால் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்; மாவட்ட ஊராட்சியானது மாவட்டங்களிலுள்ள ஊராட்சிகளுக்குத் தகுந்த நூலக மானியங்களை வழங்குவதற்குப் பரிந்துரைக்கும் ஊக்கத்துணையாகச் செயற்படும்.

## சட்டச் சிக்கல்கள்

09. தமிழ்நாடு பொது நூலக ஆணைக்குழு சட்டம் 50 ஆண்டுகாலப் பழமையானது, அத்துடன் இன்றைய தேவைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் மாற்றங்களுக்கு உட்பட வேண்டியதாகிறது. பஞ்சாயத்து ராஜ் நிறுவன அமைப்புகள் தோன்றியதன் காரணமாக, மாநிலத்திலுள்ள பொது நூலகங்களின் வளர்ச்சிக்காகவும் மாநிலத்தில் முழு அளவிலான எழுத்தறிவு மேம்பாட்டிற்காகவும், முழுவதுமாக ஆய்ந்தறிந்த திருத்தங்களைச் செய்ய வேண்டும் அல்லது புதுச்சட்டமாவது இயற்றப்பட வேண்டும் என மாநிலத் திட்டம் குழு பரிந்துரைக்கிறது.